Crl.Misc.39

D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM

Case No. CC.**146/2022**
**P.W**.5 (LW-10)

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சகாதேவன் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

எதிரி ஆஜரில் இல்லை மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025

முதல் விசாரணை - சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது ஒரத்தி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.

2. கடந்த 17.07.2021ம் தேதி 20.00 மணியளவில் சட்ராஸ் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக நிலைய பொறுப்பில் இருந்தபோது கார்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைபெற்று நிலைய குற்ற எண்.302/2021 இ.த.ச.பிரிவுகள் 279, 337 ல் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரிமுத்து மற்றும் ஜெயசீலன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்

மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின் சாட்சிகளான கார்த்தி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான மாரிமுத்து, ஜெயசீலன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட நாகராஜ் சிகிச்சை பலனில்லாமல் இறந்துவிட்டதால் வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் கார்த்தி என்பவர் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக புகார் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவம் இடம் எதுவும் செல்லாமல் சரிவர விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. வழக்கின் முதல் தகவல் அறிக்கை 17.07.2021 அன்று தான் தாமதமாக 13 நாட்கள் கழித்து தான் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் கோப்புகள் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் நான் தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.